**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 63/2024**

வாக்குமூலம்: வா.சா.2 – வெற்றிவேல்

**04.02.2026 : சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு விசாரணை :**

நான் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் சொல்லி சாட்சி சொல்ல வந்துள்ளீர்கள் என்றால் வாதி அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். வாதி எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக தெரியும். வாதி யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஜெய்லானி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஜெய்லானி என்பவர் எனக்கு தெரியுமா என்றால் அவர் வாதியிடம் பணம் வாங்கிய சமயம் தெரியும். கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி கையெழுத்து போட்ட சமயம் தான் பிரதிவாதியை எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுறுதிச்சீட்டு எங்கு எழுதப்பட்டது என்றால் வாதி வீட்டில் எழுதப்பட்டது. கடனுறுதிச்சீட்டு எழுதும் சமயம் யார் உடன் இருந்தார் என்றால் ஒரு நபர் இருந்தார் அவர் தான் எழுதினார். அவர் யார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடனுறுதிச்சீட்டில் நான் 2 வது சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் நான் 3 வது சாட்சியாக தான் கையொப்பமிட்டுள்ளேன். ஜெய்லானி முதல் கையொப்பமிட்டார். இரண்டாவதாக கடனுறுதிச்சீட்டை எழுதியவர் கையொப்பமிட்டுள்ளார். மூன்றாவதாக நான் கையொப்பமிட்டேன். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கல்லூரியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். வாதி பிரதிவாதியைத் தவிர வேறு யாருக்காவது பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடனுறுதிச்சீட்டு எந்த தேதியில் எப்போது எழுதப்பட்டது என்றால் கடந்த 20.11.2021 ஆம் தேதி காலை 9 மணியளவில் எழுதப்பட்டது. பிரதிவாதி என்ன தேவைக்காக வாதியிடம் பணம் பெற்றார் என்ற விபரம் வாதியிடம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கடனுறுதிச்சீட்டில் உள்ள விபரம் யார் சொல்லி எழுதினார்கள் என்றால்

வாதியும் பிரதிவாதியும் சொன்னதன் பேரில் எழுதப்பட்டது. பிரதிவாதி என்ன மொழியில் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார். வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி சொன்னதன் பேரில் தான் தெரியும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி வாதியிடமிருந்து பணம் பெறும் பொழுது நான் உடன் இருந்தேன். நான் சொல்வது போல் பிரதிவாதி வாதியிடம் கடனுறுதிச்சீட்டின் மூலம் பணம் பெறவில்லை என்றாலும் நான் வாதியின் நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு எந்த காலத்திலும் கடன் வாங்கும் தேவை ஏற்பட்டதில்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/−சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி